## வட்டாரப்போக்குவரத்து அலுவலர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

**பிறப்பிப்பவர்: திரு.பெ.வெங்கட்டரமணி,பி.இ.,எம்.பி.ஏ.,**

செ.ஆ.எண். 26021/இ1/2023 (ப.ஆ.எண்.21/2023) நாள்.29.09.2023

பொருள்: பணியமைப்பு - போக்குவரத்துத் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஆண்டிற்கான தொகுதி-IV பணிகள் - இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது - இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை, அவர்களின் கடிதம் எண். 1986/PSD-B2/2023, நாள்.28.08.2023.

2.போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் செ.மு.ஆணை எண்:33858/ஆர்பி1/2023 (ப.ஆ.எண்:431/2023) நாள்:28.08.2023.

*****

**ஆணை:**

பார்வை 1ல் காணும் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஆண்டிற்கான தொகுதி-IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு போக்குவரத்து துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் போக்குவரத்து ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி கோபிசெட்டிபாளையம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்காணும் நபர், பின்வரும் விபரப்படி கோபிசெட்டிபாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தற்காலிகமாக, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இளநிலை உதவியாளராக பணியமர்த்தி உத்திரவிடப்படுகிறது.

| வ. எண். | தேர்வாணைய பதிவு எண், பெயர் மற்றும் முகவரி (Tvl.) | பணி நியமன பதவி | ஊதியம் | பணியமர்த்தப்படும் உலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. | Abinaya T.A. (1205020257) 2/34-3,,SRI BALAJI NAGAR, UPPUPATTI PUTHUR, VILLIPALAYAM POST, PARAMATHI, NAMAKKAL - 637 207. | இளநிலை உதவியாளர் | ரூ. 19500/- (Pay in the Level 8(1) of Pay Matrix) | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், கோபிச்செட்டிப்பாளையம் |

2. நிபந்தனைகள்:

(1) 2016-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 20(5)-ன் படி, பணியில் சேரும் போது உடற்தகுதி குறித்து அரசு மருத்துவ அலுவலரிடமிருந்து உடற்தகுதி சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரையில் மாவட்ட மருத்துவக் குழுவிடம் மாற்றுத்திறனாளிகளுக்கான விழுக்காடு சான்றிதழ் (Percentage of Physically Challenged) பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் தனியர் தமது வயது, கல்வித் தகுதி மற்றும் சாதிச்சான்றிதழ் ஆகியவற்றின் அசல் சான்றிதழ்களை பணியில் சேரும் பொது சமர்ப்பிக்க வேண்டும்.

Scanned with CamScanner

(2) தனியர் இப்பணிநியமன ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் பணியில் சேரவேண்டும். மேலும் பணியில் சேர கூடுதல் கால அவகாசம் ஏதும் தரப்படமாட்டாது. உரிய நாட்களுக்குள் பணியில் சேரத்தவறினால், நடப்பில் உள்ள 2017-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நடைமுறை விதிகளின் படி தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்திட பரிந்துரை செய்யப்படும்.

(3) இவர் தமது வயது, கல்வித்தகுதி/ இதர சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்கள் மற்றும் தனது கடவுச்சீட்டு அளவுள்ள புகைப்படம் ஆகியவற்றினை பணியில் சேரும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(4) இந்த தற்காலிக பணி நியமனம் தனியரால் தேர்வாணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் / சான்றிதழ்கள் தவறானவை என பின்னர் தெரியவந்தால், இவரது தெரிவு மற்றும் பணி நியமன ஆணை ரத்து செய்யப்பட்டு, உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(5) தனியரது பணிநியமனம் இத்துறையில் தற்காலிகமானது. மேலும் இவ்வானை மூலம் நியமனம் செய்யப்பட்ட பணியின், வரன்முறையானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்கள் மற்றும் ஏனைய வழக்குகளின் மீதான தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும்.

(6) தனியர் பணியில் சேர்ந்தவுடன், தனியரது வேலை வாய்ப்பக அட்டையினை பணி நியமன அலுவலரிடம் ஒப்படைப்பு செய்ய வேண்டும். பின்னர் தனியரது பெயர் வேலைவாய்ப்பிற்காக காத்திருப்போர் பட்டியலில் இருந்து நீக்க பரிந்துரை செய்யப்படும்.

(7) 2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 21(1)-ன்படி தமிழக அரசின் அலுவல் மொழியான தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றதற்கான SSLC மதிப்பெண் சான்றிதழை சமர்பிக்க வேண்டும். SSLC பொதுத்தேர்வில், தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாமல் இருந்தால், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம் நிலை தமிழ்மொழித் தேர்வில், பணியில் சேர்ந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

(8) தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1973, விதி 7(3)ன் படி பணியில் சேரும்பொழுது தனது அசையா மற்றும் அசையும் சொத்து விபரப் பட்டியலை உரிய படிவத்தில் (Form I to V) சமர்ப்பிக்க வேண்டும். (மாதிரி படிவங்கள் இணையதளம் http://www.tnpsc.gov.in/t nadu govt servants conduct rules.pdf -ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்).

(9) பணியாளரின் முதுநிலை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தெரிவு பட்டியல் முதுநிலைப்படியே நிர்ணயிக்கப்படும்.

Scanned with CamScanner

3.போக்குவரத்து துறையில் இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து அடுத்த நிலையான உதவியாளர் நிலைக்கு பதவி உயர்வு பெற, கீழ்க்காணும் பயிற்சி மற்றும் துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

(i). பவானி சாகர் அரசு அலுவலர்பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் அடிப்படை பயிற்சி (இதன் தொடர்பாக உத்தரவு முதுநிலை அடிப்படையில் பின்னர் வழங்கப்படும்)

(ii). தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு

(iii). சாரநிலை அலுவலரகளுக்கான கணக்கு தேர்வு பகுதி 1

(iv). மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகள் துறைத் தேர்வு

வட்டாரப்போக்குவரத்து அலுவலர்
கோபிசெட்டிபாளையம்.

<u>பெறுநர் (ப.அ.ஒ.அ.)</u>

Abinaya T.A.
(1205020257)
2/34-3,,SRI BALAJI NAGAR,
UPPUPATTI PUTHUR,
VILLIPALAYAM POST,
PARAMATHI,
NAMAKKAL - 637 207.

நகல்:

1.முதன்மைச்செயலர் / போக்குவரத்து ஆணையர், சாலைப் பாதுகாப்பு ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

2. துணைப்போக்குவரத்து ஆணையர், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

3.பணி அமைப்பு ஆணை புத்தகம்.

அனுப்பப்பட்டது.
நாள்: 06/10/2023

Scanned with CamScanner